**உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டம் (புற நெகும) - 2022**

---

உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டத்தின் (புற நெகும) 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 2790–எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) மற்றும் 2016 நவம்பர் 02 ஆந் திகதிய 3431–எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சாகவிருந்த தற்போதைய பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் 07 மாகாணங்களின் மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாக உள்ளன. கணக்களிப் பொறுப்பு, நிதிசார் மற்றும் தொழில்நுட்பரீதியாக பலப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளினூடாக செயற்திட்டத்தின் முன்னேற்றமடைந்த உள்ளூராட்சி உட்கட்டமைப்பு செயற்பாடுகள் மற்றும் பயனுறுதிமிக்க சேவை விநியோகம் என்பவற்றை அடைந்துகொள்ளுதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். நீடித்த சிறுநீரக நோய்களினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் அபிவிருத்தி குறைந்த 07 மாகாண பிரதேசங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகள் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படும் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளினை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் தொடர்ச்சியான கடன்களின் நோக்கமாகும். ஆகையினால், நீர் வழங்கல் முறைமைகளின் முன்னேற்றம், உட்கட்டமைப்பு அடிப்படை சேவை வழங்கல் உள்ளூராட்சி கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் இயலளவுகளை வலுப்படுத்துதல் தொடர்பான சிக்கல்கள் முன்வைக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன. 2790 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 8,940 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 68.8 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,670 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 59 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 1,339.33 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 9.8 மில்லியன் மிகுதி மதிப்பிடப்பட்ட கிரயம் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்பு செய்யப்பட்டது. 3431 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) தொடர்ச்சியான கடன் உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 8,700 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் மேலதிக கடன் ஆரம்ப செயற்திட்டத்தின் செயலாற்றலை அதிகரிப்பதற்கு 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்டது. மதிப்பிடப்பட்ட மொத்த செயற்திட்ட கிரயம் இலங்கை அரசாங்கத்தின் ரூபா 1,071.47 இற்கு சமமான ஐ.அ.டொலர் 7.8 மில்லியனுடன் சேர்த்து ரூபா 9,771.47 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 67.8 மில்லியனாகும். செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2023 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | செயற்திட்ட வழிநடாத்தல் குழுவின் கூட்டங்கள் 02 மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 03 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்ட வழிநடாத்தல் குழுவின் கூட்டங்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 சனவரி 12 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டம் வருடத்தில் நான்கு நடைபெற வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் இரண்டு கூட்டங்களே நடாத்தப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட அமுல்படுத்தல் திட்டங்களின் பிரகாரம், 07 மாகாணங்களில் அவர்களின் உட்கட்டமைப்பு ரீதியான தேவைப்பாடுகளினை மேம்படுத்துவதற்கு 105 உள்ளூராட்சி சபைகளுக்கு செயற்திட்டம் உதவியளித்திருந்ததுடன் 178 உள்ளூராட்சி சபைகளின் தொடர்புடைய அபிவிருத்தி வேலைகள் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும் பிற்சேர்க்கை கடன் வசதிகளின் கீழ் 29 உள்ளூராட்சி சபைகளில் 29 நீர் வழங்கல் செயற்திட்டங்கள், 35 நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன் 29 நீர் வழங்கல் செயற்திட்டங்களில் 19 செயற்திட்டங்கள் முன்னைய ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எனினும் 10 செயற்திட்டங்களின் பூர்த்தி செய்தலில் 8-24 மாத கால தாமதம் காணப்பட்டது. 35 சிவில் வேலைகளில் 33 உட்கட்டமைப்பு செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எனினும் அவற்றில் 8 நிர்மாணங்கள் 3-31 மாதகால தாமதத்துடன் காணப்பட்டன.

### 3.2 செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமை

பின்வரும் உப செயற்திட்டங்கள் 2017 ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த உப செயற்திட்டங்கள் 2022 யூன் 30 வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| இல. | நடவடிக்கைகள் | தொடங்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட திகதி | மதிப்பிடப்பட்ட பெறுமதி<br>ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | தனமல்வில மற்றும் ஹம்பேகமுவ விநியோக முறைமைக்கான நீர் வழங்கல் திட்டம் | 2017 ஏப்ரல் | 1,270 | சுற்றாடல் ஆய்வுகளில் மேலதிக கிரயம் மற்றும் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, இந்த உப செயற்திட்டத்தை அமுல்ப்படுத்த வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது. | உப செயற்திட்டம் கூடிய விரைவில் தொடங்கப்பட வேண்டும் அல்லது செயற்திட்ட நிர்வாகக் கையேட்டில் உள்ள வேலைப் பட்டியல்கள் திருத்தப்பட வேண்டும். |
| (ஆ) | தனமல்வில மற்றும் ஹம்பேகமுவ திட்டத்திற்கான நீர் சுத்திகரிப்பு நிலையம் | 2017 ஏப்ரல் | 430 | | |
| (இ) | போர்ஹோல் பம்பி இல்ல குளோரினேட்டர்களின் நிர்மாணம் – மத்திய மாகாணம் (மூன்று எண்ணிக்கைகள்) | -மேற்படி- | 60 | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் இந்த ஆழ்துளைக் கிணற்றிலிருந்து போதிய நீரைப் பெற முடியாது எனத் தெரியவந்துள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | தனமல்வில மற்றும் ஹம்பேகமுவ திட்டத்திற்கான உட்செலுத்தும் தொட்டி | -மேற்படி- | 100 | சுற்றாடல் ஆய்வுகளில் மேலதிக கிரயம் மற்றும் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, இந்த உப செயற்திட்டத்தை அமுல்ப்படுத்த வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது. | -மேற்படி- |
| (உ) | கொட்டகலையில் பிரதேச சபை கட்டிடத்தின் நிர்மாணம் | -மேற்படி- | 50 | தேசிய வழிநடாத்தல் குழுவின் ஆலோசனையின் பிரகாரம் காணி பிரச்சனை காரணமாக கைவிடப்பட்டது. | -மேற்படி- |
| (ஊ) | ஆர்கரபத்தனவில பிரதேச சபை கட்டிடத்தின் நிர்மாணம் | | | | |

### 3.3 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்

### (அ) முன் அலுவலக முறைமை மற்றும் மின்-புறநெகும மென்பொருள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இச் செயற்திட்டத்தின் மூலம் 137 பிரதேச சபைகளுக்கான வன்பொருளை வழங்கும் ”முன் அலுவலக முறைமை” எனப்படும் தகவல் தொழில்நுட்ப தீர்வு அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட முன் அலுவலக முறைமைக்கு ஆதரவளிக்கும் வகையில், பின் அலுவலக முறைமை இல்லாததால், உத்தேசிக்கப்பட்ட நோக்கத்தை அடைந்துகொள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மத்திய மாகாணம் மற்றும் வட மத்திய மாகாணத்தில் உள்ள 41 உள்ளூராட்சி நிறுவனங்களில் 17 பிரதேச சபைகள் மேற்கூறிய முறைமையை முழுமையாக நடைமுறைப்படுத்தியிருக்காதமையும் 16 பிரதேச சபைகள் மேற்படி முறைமையை நடைமுறைப்படுத்தாமல் புதிய மாற்று மென்பொருளை கொள்வனவு செய்திருந்தமையும் மேலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | முன் அலுவலக முறைமை குறைந்த வருமானம் கொண்ட பிரதேச சபைகளுக்கு தகவல் தொழில்நுட்பத் தலையீடுகளுக்கான நுழைவு மட்டமாக உருவாக்கப்பட்ட ஒரு எளிய தீர்வாகும்.<br><br>அனைத்து தொகுதிகளையும் (modules) முழுமையாக நடைமுறைப்படுத்தாதமை தொடர்பாக, சில பிரதேச சபைகள் வீதவரியை அறவிடுவதில்லை என்பதையும், அத்தகைய பிரதேச சபைகளில் இந்த முறைமை செயற்படுவதில்லை என்பதையும் தயவுசெய்து குறித்துக் கொள்ளவும். மேலும், சம்பந்தப்பட்ட பிரதேச சபைகள் அல்லது மாகாண சபைகளிடமிருந்தே தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருப்பதால், பிரதேச சபைகள் வேறு எந்த முறைமையையும் பெறுவதைத் தடுக்கும் அதிகாரம் செயற்திட்டத்திற்கு இல்லை என்பதை தயவுசெய்து குறித்துக் கொள்ளவும். | மென்பொருளின் பலவீனத்தை சீர்செய்வதற்கும், சொத்துக்கள் மற்றும் மென்பொருளை குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | வடமேல் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் மின்-புறநெகும மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், வடமேல் மாகாணத்தில் உள்ள எந்தவொரு உள்ளூராட்சி அதிகாரசபையிலும் தற்போது அது செயற்படுத்தப்படவில்லை. புறநெகும செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது எழும் பிரச்சினைகளை தீர்ப்பதில் செயற்திட்டம் தலையிடாததால் மின்-புறநெகும மென்பொருள் நிறுவப்பட்ட ரிதிகம உள்ளூராட்சி சபையில் இரண்டு வருடங்களாக மின்-புறநெகும மென்பொருள் செயலிழந்திருந்தது. | 2020.09.17 இல் நடைபெற்ற தேசிய வழிநடாத்தல் குழுக் கலந்துரையாடலில், புறநெகும செயற்திட்டம் 2021 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தமையால் 2021.02.28 இற்குப் பின்னர் முன் அலுவலகம் மற்றும் மின்-புறநெகும தொடர்பான பணிகள் குறித்து செயற்திட்டப் பதவியணியினரின் தலையீடு எதுவும் செய்ய முடியாது எனத் தீர்மானிக்கப்பட்டது. | ஏற்பட்ட செலவினங்கள் விளைவற்றிருப்பதை தடுப்பதற்கு நிகழ்சசித்திட்டமொன்று தொடங்கப்பட வேண்டும். |

**(ஆ) சொத்து முகாமைத்துவ மென்பொருள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அவுஸ்திரேலிய தனியார் கம்பனியுடன் 2018 திசெம்பர் 15 இல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் கீழ் ஏழு மாகாணங்களில் உள்ள ஏழு பிரதேச சபைகளுக்கான உப செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டது. இந்த உப செயற்திட்டத்தின் நோக்கம் சொத்து முகாமைத்துவ மென்பொருளை ஒரு முன்னோடி செயற்திட்டமாக உருவாக்குவதாகும். 2006 சனவரி 25 ஆம் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை முகவராண்மை சுற்றறிக்கையால் தேவைப்படுத்தப்பட்டவாறு பெறுகை நடைமுறைகள் இல்லாமல் வெளிநாட்டு தனியார் கம்பனி இந்த ஒப்பந்தத்திற்காக தெரிவுசெய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேற்கூறிய மென்பொருளின் ஆதரவு மற்றும் பராமரிப்பு முறைமைக்கு மேற்படி உடன்படிக்கையில் எந்த ஏற்பாடும் காணப்படாதமை மேலும் வெளிப்படுத்தப்பட்டது. மேலும், இலங்கையில் உள்ளூராட்சித் துறையில் தற்போதுள்ள விதிகள் மற்றும் கையேடுகளைப் படிப்பதன் மூலம் எந்தவொரு சாத்தியவள ஆய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேற்படி உடன்படிக்கையில் உள்ள வேலைத் திட்டத்தின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திட்டமிட்டபடி செயற்பாடுகளை நிறுவுதல் மற்றும் ''பயிற்சிப் பொருட்களை உருவாக்குதல் மற்றும் முழுமையான பதவியணியினர் பயிற்சி'' என்பன பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ADB இன் ஆலோசனையின் அடிப்படையில், PMU மற்றும் அமைச்சு இந்த பெறுகை மற்றும் ஏனைய ஒத்த நிறுவனங்களுக்கு (ஏதேனும் இருந்தால்) வாய்ப்பை வழங்குவதற்கு CQS முறையைப் பின்பற்றியிருந்தன. எனவே, பெறுகை செயற்பாட்டில் எந்த குறைபாடும் காணப்படவில்லை. | தேவையான தரத்தை உறுதிசெய்து உடனடியாக வேலையை பூர்த்தி செய்வதற்கு செயற்திட்டம் ஒப்பந்ததாரரிற்கு வழிகாட்டுதல் வேண்டும். |
| (ii) | மென்பொருளை நிறுவிய 07 உள்ளூராட்சி சபைகளில் 05 இன் கணக்காய்வுகளின் போது மென்பொருள் நிறுவலின் போது பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களின் தரவுகள் மாத்திரமே மென்பொருளின் தரவுத்தள முறைமையில் காணப்பட்டதுடன் அந்த தரவுகள் | இச் செயற்திட்டத்தின் முதன்மைப் பணியானது, உள்ளூராட்சி சபைகளின் தற்போதைய முழுமையான தரவை இந்த முறைமையில் பதிவுசெய்வதற்கும் மென்பொருளைக் | செயற்திட்ட பட்டியலின் போது மேம்பாடுகளைச் செய்வதற்கும் அதன் பின்னர் தொழில்நுட்ப சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி போன்ற தொடர்ச்சியான |

| | | |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்தத் தரவைப் பயன்படுத்தி சொத்து முகாமைத்துவத்திற்கான முடிவுகளை எடுக்கக்கூடிய எந்தவொரு தகவலையும் இந்த மென்பொருள் மூலம் தயாரித்து பயனருக்குக் கிடைக்கச் செய்ய முடியாதுள்ளமையும் உள்ளூராட்சி சபைகளால் மென்பொருளைப் பயன்படுத்தாமல் அவர்களது தேவைகளை பூர்த்தி செய்வதற்கு எக்செல் தாள்கள் (excel sheets) பயன்படுத்தப்படுகின்றதும் அவதானிக்கப்பட்டது. எனவே, பயனற்ற மென்பொருள் ஐ.அ.டொலர் 133,747.70 கிரயத்தில் நிறுவப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கையாள்வது தொடர்பான அனைத்துப் பயிற்சிகளையும் வழங்குவதும் ஆகும். அதன் பிரகாரம் தேவையான அனைத்து பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளதால், அதை நாளதுவரையாக்கிய நிலையில் வைத்திருப்பது சபையின் பொறுப்பாகும். | செயன்முறை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(இ) நீர் வழங்கல் செயற்திட்டங்கள்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|
| நீர் வழங்கல் வசதிகளின்மை, அணுகும் வீதி காணப்படாமை, கட்டிட வடிவமைப்புடன் இணங்காதமை, மயானங்களுக்கான பொதுமக்களின் தேவையின்மை, சாத்தியவள ஆய்வுகள் மேற்கொள்ளப்படாதமை, தண்ணீர் தொட்டிகள் அமைப்பதில் தரைமட்டத்தை கருத்தில் கொள்ளாதமை, கொவிட்-19 தொற்றுநோய் தாக்கம், நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் போதுமான இயலளவு இல்லாதமை மற்றும் கேட்போர் கூடம்/ சமூக மண்டபத்தைப் பயன்படுத்துவதற்கான சரியான திட்டமிடல் இல்லாததால் தொடங்கப்பட்டு பாதியில் நிறுத்தப்பட்ட 33 செயற்திட்டங்களுக்கு ரூபா 3,809 மில்லியன் செலவிடப்பட்டது. | பல்வேறு காரணங்களால் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய முடியவில்லை. | பொதுமக்களிற்கு நலன்கள் கிடைப்பதற்கு செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

## 3.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| பொறியியலாளர் ஒருவர் ஒரு வருடத்திற்கு தொழில்நுட்ப கணக்காய்விற்கான தனிப்பட்ட ஆலோசகராக தெரிவுசெய்யப்பட்டிருந்தார். பின்னர் அவரது காலம் 2019 நவம்பர் வரை நீடிக்கப்பட்டிருந்தது. அமைச்சின் செயலாளர் மற்றும் தொழில்நுட்ப கணக்காய்வு ஆலோசகர் ஆகியோர் கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அவ்வப்போது மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்படும் விதிமுறைகள் மற்றும் வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் குறிப்பு விதிமுறைகளின் கீழ் வரையறுக்கப்பட்ட பல்வேறு குறிக்கோள் பணிகளில் குறிப்பிட்ட பிரிவை சேர்க்க வேண்டியிருந்தது. தொழில்நுட்ப கணக்காய்வு ஆலோசகர் இறுதி அறிக்கையில் முக்கிய சிக்கல்கள் மற்றும் பரிந்துரைகளை பதிவு செய்ய வேண்டிய போதிலும் அறிக்கையில் முக்கிய பிரச்சினைகள் மற்றும் பரிந்துரைகள் எதுவும் காணப்படவில்லை. | தொழில்நுட்ப கணக்காய்வு ஆலோசகர் ஒப்பந்த பெறுகையை மேற்கொள்வதற்கு செயற்திட்ட முகாமைத்துவ அலகுக்கு உதவினார். | கொடுப்பனவை அறவிடுவதற்கு செயற்திட்டம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 3.5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்ட உள்ளக கணக்காய்வை உள்ளடக்கும் வகையில், செயற்படும் அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. எனினும் போதுமான உள்ளக கணக்காய்வு ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வு முறையாக செயற்பட வேண்டும். |